THE HINDU

14 MAY 2024

# BJP nominee booked for violating poll code

**The Hindu Bureau**
HYDERABAD

The Hyderabad police booked two cases against the BJP candidate for Hyderabad, Madhavi Latha Kompella, and her followers on the polling day.

Hyderabad Commissioner K. Sreenivasa Reddy said, "Initially, she checked the voter IDs of some women voters and asked them to lift veils from their faces. Later, when her party workers were detained for campaigning with dummy EVMs, she entered a police station and freed the two accused," he said.

Within hours of a video of Ms. Kompella checking the identity of burqa-clad voters going viral, the police filed a case against her. The incident took place at a booth in Malakpet.

THE HINDU

14 MAY 2024

# A.P. sees 78% turnout amid violence

Lok Sabha and Assembly elections were held simultaneously in the State; instances of YSRCP and TDP cadres clashing and poll equipment being damaged reported; MLA, voter slap each other in Tenali; TDP poll agents 'abducted' in Punganur

Sambasiva Rao M.
GUNTUR

Andhra Pradesh recorded a turnout of over 78% (till 11.50 p.m.) in the simultaneous Lok Sabha and Assembly elections held across the State, amid several reports of violence.

Even as the polling was scheduled to conclude by 6 p.m., hundreds of voters were seen in queues at 3,500 polling stations across the State by that time. The poll percentage is expected to cross 80%.

There are 4.14 crore registered voters in the State, which include 2.03 crore men, 2.10 crore women and 3,421 transgenders.

Addressing the media, Andhra Pradesh Chief Electoral Officer Mukesh Kumar Meena said though there were incidents of violence, no serious or fatal injuries were reported and the polling was largely peaceful.



**Duty first:** Voters waiting for their turn at a polling station at Undavalli in Guntur district on Monday. K.V.S. GIRI

Asked if repolling would be held, he said it was unlikely. "However, the final call will be taken after the Election Observers submit their reports. All the Election Observers and Returning Officers will convene meetings with the representative of political parties at their respective constituencies," he said.

## Vehicles torched

Incidents of violence were reported from many polling stations. The Macherla Assembly constituency in Palnadu district reported clashes between the YSRCP and TDP cadres. The activists of both parties torched vehicles and hurled burning petrol bottles at each other.

The EVMs, Ballot Units (BUs) and other election equipment were damaged at 11 polling stations which include eight in the Macherla Assembly, two in Kodur and one in Darsi during the violence.

Referring to these incidents, Mr. Meena said the technical staff verified all the Ballot Units and clarified that the data stored in them was safe and could be retrieved during the counting of votes. Polling continued in all these stations even after the poll equipment was damaged as the election authorities replaced them with new ones, he said.

The authorities replaced 220 EVMs, BUs and around 600 VVPAT machines as they were not functioning properly when the polling began at 7 a.m.

YSRCP MLA Annabathuni Sivakumar from Tenali Assembly constituency was arrested after he allegedly attacked a voter who was waiting in the queue at a polling station.

The voter reportedly asked the MLA to wait for his turn in the queue, which led to the exchange of heated arguments. Mr. Sivakumar and the voter slapped each other. The supporters of the MLA attacked the voter. A video clip of the incident went viral on the social media.

Meanwhile, the police traced three TDP polling agents, who were allegedly abducted from Punganur Assembly constituency by their rival group. Many political leaders were put under house arrest in Palnadu, Guntur, Annamayya districts, the CEO said.

THE TIMES OF INDIA

14 MAY 2024

# Dip continues: 67.3% vote in Phase 4 against 69.6% in 2019

## Srinagar Turnout Only 38%, But Best Since 1996

TIMES NEWS NETWORK

**New Delhi:** As voting for the 379 seats, representing more than two-thirds of Lok Sabha, ended on Monday, turnout dipped to 67.3% in the fourth phase compared with 69.6% in 2019, mirroring the falling trend seen during the previous rounds.

The lowest turnout was recorded in Srinagar, where 38% turned up at the poll booths, although it was the best performance in the constituency since 1996, when 30.1% registered voters cast their votes. In 2019, 14.4% voting was recorded.

According to data available on Election Commission's voter turnout app around midnight, the second worst polling was seen in Hyderabad, AIMIM chief Asaduddin Owaisi's home turf, which saw 45.1% polling, an improvement from 44.8% turnout in 2019. Secunderabad witnessed 48.1% voting, higher than 46.5% five years ago.

Pune saw 51.3% polling, although it managed to better last time's record of 49.9%. Similarly, Kanpur reported 52.9% polling compared with 51.6% in 2019, while Kannauj, where Samajwadi Party chief Akhilesh Yadav is contesting, reported a marginal improvement in polling—from 60.86% to 60.89%.

Barring Telangana and J&K, all other states where elections were held on Monday reported lower turnout with the sharpest decline in Madhya Pradesh where 71% polling was registered, against 75.7% in 2019. Polling time in certain assembly segments of the 17 parliamentary constituencies in Telangana was increased due to higher voter participation, EC said in a statement.

While West Bengal, where polling was held in eight seats, recorded the highest turnout of 78.4%, it was still lower than five years ago. Among the 96 seats, where 1,717 candidates were in the fray, Bolpur recorded highest polling of 81.2%, as against 85.7% in 2019. Bardhaman Purba, also in Bengal, saw a turnout at 81%, compared with 84.8% in the last election.

The EC app showed 78.4% turnout for the AP assembly, where elections were held simultaneously. For all the 25 LS seats, 78.2% polling was recorded.

In each of the four phases, the polling percentage has been lower in 2024 with the third round seeing the narrowest gap, while the second saw the highest, according to data available till late on Monday night. The updated numbers for the fourth phase are expected on Tuesday evening.

EC said peaceful polling was reported in 96 constituencies across 10 states and J&K. With this round, polling has now been completed in 23 states and UTs along with assembly elections in Andhra Pradesh, Sikkim and Arunachal Pradesh.



Photo: Reuters

Women from Bonda tribe wait to vote in Malkangiri, Odisha, on Monday

**PHASE 4 TURNOUT** (%)

| Highest | Lowest |
|---|---|
| W Bengal (8 seats) | J&K (1) |
| 78.4 | 38 |

> **Trinamool worker killed** in TMC-BJP clash in Birbhum: the first death in poll-related violence in Bengal | FLAP OPP

> **YSRCP MLA Annabathuni Sivakumar slapped a voter who slapped him back** after the former jumped the queue at a booth in Guntur | P 10

> **BJP's Hyd LS candidate Madhavi Latha booked** after a video showed her asking voters to lift their burqa and verifying their ID cards | P 10

THE HINDU
14 MAY 2024

# Telangana polling peaceful; voter turnout close to 65%

M. Rajeev
HYDERABAD

Polling for all the 17 Lok Sabha constituencies in Telangana was conducted peacefully on Monday with no untoward incident being reported from any part of the State. Repolling was not ordered even in one of the 35,809 polling stations.

While the 2019 election saw a voter turnout of 62.77%, the higher polling percentage this time – 64.93% (till 11.50 p.m.) – has left the three main contenders, the ruling Congress, BRS and BJP, guessing the prospects of their respective candidates in the election which is likely to see triangular contests in some of the seats.



BRS leader K.T. Rama Rao after casting his vote. NAGARA GOPAL

Hyderabad registered the lowest poll percentage of 46.08, while Secunderabad saw 48.11% and Malkajgiri 50.12% polling.

THE HINDU
14 MAY 2024

# Fourth phase of LS polls logs 67.7% voter turnout

**Polling for 379 seats now completed; highest voting percentage of 78.44 recorded in West Bengal, lowest of 37.98 in J&K's Srinagar; incidents of violence and EVM snag reported in some States**

Sreeparna Chakrabarty
NEW DELHI

A voter turnout of 67.7% was recorded on Monday in the fourth phase of the Lok Sabha election in 96 constituencies across 10 States and Union Territories, as per provisional data at 11.50 p.m. Incidents of violence and electronic voting Machine (EVM) malfunctioning were reported in some States.

A total of 1,717 candidates were in the fray in this phase and 17.7 crore electors were eligible to exercise their franchise. With this phase, the voting process in 23 States and Union Territories and 379 seats has been completed. The last three phases are scheduled for May 20, May 25 and June 1, followed by the counting on June 4.



**Defying odds:** Tribal women voters with their babies stand in a queue to cast their votes in Jharkhand's Khunti on Monday. ANI

The highest voting percentage of 78.44 was recorded in West Bengal, where Trinamool Congress and BJP workers clashed in various parts of Birbhum and Bardhaman-Durgapur seats.

Jammu and Kashmir, which is witnessing the first election after the revocation of its special status under Article 370, recorded the lowest turnout. The Lok Sabha constituency of Srinagar recorded a polling percentage of 37.98% till 11.50 p.m., the highest in many decades, the Election Commission (EC) said.

The voting percentage in Maharashtra was also on the lower side at 59.64%. Andhra Pradesh and Telangana saw voter turnouts of 78.15% and 64.93%, respectively.

Polling also took place for the 175 Assembly seats in Andhra Pradesh and 28 of the 147 seats in Odisha.

A case was registered against BJP candidate K. Madhavi Latha in Hyderabad Lok Sabha constituency after she was purportedly seen in a video clip on social media asking burkha-clad women voters to show their faces to compare it with the photo identity cards.

CONTINUED ON
» PAGE 10

## Fourth phase of LS polls logs 67.7% voter turnout

In Palnadu, Kadapa and Annamayya districts of Andhra Pradesh, the TDP and YSRCP traded charges and accused each other of resorting to violence.

YSRCP leader and Tenali MLA A. Shiva Kumar allegedly manhandled a voter in Tenali following an argument, police said, adding the voter also retaliated.

Bihar and Odisha saw turnouts of 57.06% and 73.97%, respectively while in Jharkhand, the polling percentage was 65.31. The 13 seats in Uttar Pradesh, which went to the polls, saw a turnout of 58.05%.

Of the 96 seats that went to the polls on Monday, the BJP won 42 in the 2019 Lok Sabha election while the YSR Congress won 22 seats (in Andhra Pradesh), the Bharat Rashtra Samithi nine (Telangana), the Congress six, the Trinamool Congress four, the TDP three, the BJD, the AIMIM and Shiv Sena two each and the NCP, LJP, JD(U) and NC one each.

In Kannauj, SP's Akhilesh Yadav accused the BJP of rigging the polls. Mr. Yadav claimed there were complaints of voting being disrupted in polling booths. He said that despite the "dishonesty" in Kannauj, the elections were going well and people were coming out to cast their votes. "As soon as I arrived, the goons ran away from the booths," he claimed.


In a post on X, the State unit of the BJP alleged that in the Bidhuna Assembly segment of Kannauj Lok Sabha seat, SP goons were not allowing those wanting to vote for the BJP and were indulging in booth capturing along with the presiding officer and police.

In Etah district, at Gautam Buddha Inter College in Aliganj tehsil, part of the Farrukhabad Lok Sabha constituency, District Magistrate Prem Ranjan Singh took an elderly woman voter in a wheelchair to cast her vote.

DECCAN CHRONICLE
14 MAY 2024

# Sahoo inspects security of EVMs in Thoothukudi

M. ARULOLI I DC
THOOTHUKUDI, MAY 13



Tamil Nadu Chief Electoral Officer (CEO) Satyabrata Sahoo has inspected the security measures at the strongrooms, where the EVMs are kept, in Thoothukudi.

Mr Sahoo, who reached Thoothukudi on Monday evening, reviewed the arrangements for a smooth counting process on June 4. After holding a special meeting with the district election officer, assistant returning officers, the district superintendent of police and Thoothukudi city corporation commissioner, Mr Sahoo instructed the collector to coordinate with the electricity department to ensure uninterrupted power supply for the CCTV cameras at the strong room and at the counting centre.

Earlier, Thoothukudi collector G. Lakshmipathy, who is also the district election officer, said that all necessary security arrangements have been properly implemented as per the directives given by the CEO a few days ago through video conferencing. Adding that the EVMs have been kept safe and secure in the strong room, the collector added that he has been visiting the strongroom daily to ensure that everything was in order.

**Mr Sahoo instructed the collector to coordinate with the electricity department to ensure uninterrupted power supply for the CCTV cameras.**

DT Next
14 MAY 2024

# Violence in Andhra, Bengal; turnout 64%

*With the fate of more than half the Lok Sabha seats sealed, parties get ready for the final push*

**NEW DELHI: A voter turnout of over 64 per cent was recorded on Monday in the fourth phase of the Lok Sabha elections covering 96 constituencies spread over 10 states and Union Territories, with scattered incidents of violence reported in West Bengal and Andhra Pradesh.**

West Bengal, where polling was held in eight constituencies, again recorded an impressive turnout at 76.56 per cent, the highest among states/UTs in this phase. Srinagar constituency in Jammu and Kashmir witnessed 37.93 per cent voting in the first Lok Sabha election in the Valley since the scrapping of Article 370, with the EC stating that it was the "highest turnout in decades".

According to the EC's voter turnout app at 10 pm, the overall voting in this phase was 64.05 per cent.

However, it said that this was an "approximate" trend as data from polling stations was still being collated.



**In a brazen show of VIP culture, Andhra Pradesh MLA Shivakumar (YSRCP) slapped a voter after he objected to the legislator jumping the queue at a booth in Guntur. The voter returned the blow, the video of which soon went viral**

A large number of voters were in the queue at polling stations even after the fixed time of polling ended at 6 pm, the Election Commission said in a statement at 8 pm.

Among other states, Andhra Pradesh (25 seats) recorded 68.20 per cent polling, Bihar (five seats) 56.75 per cent, Jharkhand (four seats) 64.59 per cent, Maharashtra (11 seats) 57.58 per cent, Odisha (four seats) 64.81 per cent, Telangana (17 seats) 62.28 per cent and Uttar Pradesh (13) 58.05 per cent.

A provisional voter turnout of 71.72 per cent was recorded in Madhya Pradesh (eight seats).

The overall voter turnout in the first three phases of the Lok Sabha elections was 66.14 per cent, 66.71 per cent and 65.68 per cent, respectively.

With the conclusion of Phase 4, polling for general elections has crossed the halfway mark as it has been completed in 23 states/UTs and 379 Lok Sabha constituencies out of 543.

Also, assembly elections were held in Andhra Pradesh on Monday, apart from polling in 28 assembly seats in Odisha.

Sporadic incidents of violence marred the fourth phase of Lok Sabha polls in the eight parliamentary constituencies of West Bengal as TMC and BJP workers clashed in various areas under Birbhum and Bardhaman-Durgapur Lok Sabha seats.

In Andhra, there were nearly a dozen clashes reported in Palnadu district.

Polling for the next three phases in the country will be held on May 20, May 25 and June 1. The counting of votes is on June 4.

இந்து தமிழ் திசை

14 MAY 2024

மக்களவைக்கு 9 மாநிலங்களில் உள்ள 96 தொகுதிகளில் நடைபெற்ற

# 4-ம் கட்ட தேர்தலில் 63% வாக்கு பதிவு

- ஆந்திரா, மேற்குவங்கத்தில் வன்முறை; துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் நடைபெற்றன. மேற்குவங்கத்தில் 76.02%, ஜம்மு - காஷ்மீரில் 36.88% வாக்குகள் பதிவாகின.

என்.மகேஷ்குமார்

அமராவதி/புதுடெல்லி

நான்காம் கட்டமாக 96 மக்களவைத் தொகுதிகளுக்கு நேற்று தேர்தல் நடைபெற்றது. இதில் 63.01 சதவீத வாக்குகள் பதிவாகின. ஆந்திராவில் பல்வேறு இடங்களில் வன்முறை சம்பவங்கள் அரங்கேறின. 2 இடங்களில் போலீஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். மேற்குவங்கத்தின் பல்வேறு இடங்களில் திரிணமூல் காங்கிரஸார், பாஜகவினர் இடையே மோதல்கள் ஏற்பட்டன.

நாடு முழுவதும் 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடத்தப்படுகிறது. கடந்த ஏப்ரல் 19, 26, மே 7 ஆகிய தேதிகளில் 3 கட்ட தேர்தல்கள்நிறைவடைந்துஉள்ளன. 4-ம் கட்டமாக 9 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 மக்களவைத் தொகுதிகளுக்கு நேற்று வாக்குப் பதிவு நடைபெற்றது.

இதன்படி ஆந்திராவில் மொத்தமுள்ள 25 மக்களவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. அதோடு அந்த மாநிலத்தின் 175 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது.

ஒடிசாவில் 4 மக்களவைத் தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெற்றது. அந்த மாநிலத்தில் மக்களவைத் தேர்தலோடு, சட்டப்பேரவைக்கும் தேர்தல் நடக்கிறது. அங்கு மொத்தமுள்ள 147 சட்டப்பேரவைத் தொகுதிகளில் முதல் கட்டமாக 28 தொகுதிகளுக்கு வாக்குப் பதிவு நடைபெற்றது.

தெலங்கானாவில் 17, பிஹாரில் 5, ஜார்க்கண்டில் 4, மத்திய பிரதேசத்தில் 8, மகாராஷ்டிராவில் 11, உத்தர பிரதேசத்தில் 13, மேற்கு வங்கத்தில் 8, காஷ்மீரில் ஒரு மக்களவைத் தொகுதிக்கு தேர்தல் நடைபெற்றது.

### ஆந்திராவில் வன்முறை

ஆந்திராவில் நேற்று காலையில் வாக்குப் பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. ஆனால் பிற்பகலில் பல்வேறுஇடங்களில்வன்முறைகள் அரங்கேறின.

பல்நாடு மாவட்டம், கம்பம்பாடு கிராமத்தில் உள்ள வாக்கு சாவடியில் தெலுங்கு தேசம் - ஆளும் ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ் கட்சியினர் இடையே மோதல் ஏற்பட்டது. இருதரப்பினரும் கோடாரி, கத்தி, கற்களால் தாக்கிக் கொண்டனர். இதில் ஒரு பெண்ணின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

பீலேரில் தெலுங்கு தேசம் கட்சி முகவர்கள் 3 பேரை ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியினர் கடத்தியதாக போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அன்னமைய்யா மாவட்டம், பாபக்ககாரி பல்லியில் தெலுங்கு தேசம் முகவரான சுபாஷ் மீது ஒய். எஸ்.ஆர். காங்கிரஸார் தாக்குதல் நடத்தினர். இதில் பலத்த காயமடைந்த அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கடப்பா மாவட்டத்தில் சின்ன குலபாலேரு வாக்குச் சாவடியில் தெலுங்கு தேசம் முகவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

ஸ்ரீகாகுளம் மாவட்டம் கோகர்லபல்லியில் ஏற்பட்ட மோதலில் தெலுங்குதேசம் கட்சியை சேர்ந்த 3 பேர் காயமடைந்தனர். இதேபோன்று திருப்பதியை அடுத்துள்ள சந்திரகிரி தொகுதியில் தெலுங்குதேசம், ஜெகன் கட்சியினர் இடையே கைகலப்பு ஏற்பட்டது. அங்கு போலீஸார் விரைந்து சென்று இரு தரப்பினரையும் தடியடி நடத்தி கலைத்ததோடு, வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

பல்நாடு மாவட்டம் நரசராவ் பேட்டை நகராட்சி பள்ளி பகுதியில் தெலுங்கு தேசம் கட்சி வேட்பாளர் சதலவாடா அர்விந்த்தின் கார் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. மத்திய ரிசர்வ் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியும், தடியடி நடத்தியும் கலவரக்காரர்களை கலைத்தனர்.

மேற்குவங்கத்தின் பர்தமான்-துர்காபூர் மக்களவைத் தொகுதியில் பல்வேறு பகுதிகளில் பாஜக தொண்டர்கள், திரிணமூல் தொண்டர்களுக்கு இடையே மோதல்கள் ஏற்பட்டன. பாஜகவேட்பாளர் திலீப்கோஷ் சென்ற வாகனம் மீது மர்ம நபர்கள் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் 2 பாதுகாவலர்கள் காயமடைந்தனர். வாகனமும் கடுமையாக சேதமடைந்தது.

பிஹாரில் முங்கர் பகுதி வாக்குச் சாவடியில் தேர்தல் அலுவலர் ஓம்கார் குமார் சவுத்ரிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

### பிஹாரில் வன்முறை

பிஹாரின் முங்கர் பகுதிக்கு உட்பட்ட 145, 146 வாக்குச்சாவடிகளை குறிவைத்து சிலர் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். பாதுகாப்புப் படை வீரர்கள் தடியடி நடத்தி அவர்களை விரட்டியடித்தனர். இதில் சிலர் படுகாயம் அடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். மத்திய பிரதேசத்தின் 8 மக்களவைத் தொகுதிகளில் நேற்று தேர்தல் நடைபெற்றது. அந்த மாநில முதல்வர் மோகன் யாதவ், உஜ்ஜைனியில் வாக்களித்தார். தேசிய மாநாடு கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா, அவரது மகன் ஒமர் அப்துல்லா ஆகியோர் ஸ்ரீநகரில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்தனர்.

ஒட்டுமொத்தமாக 4-ம் கட்ட மக்களவைத் தேர்தலில் 63.01 சதவீத வாக்குகள் பதிவாகின. மேற்குவங்கத்தில் அதிகபட்சமாக 76.02 சதவீத வாக்குகள் பதிவாகின. குறைந்தபட்சமாக ஜம்மு-காஷ்மீரில் 36.88 சதவீத வாக்குகள் பதிவாகின. ஆந்திர சட்டப்பேரவை தேர்தலில் மாலை 6 மணி நிலவரப்படி 72 சதவீத வாக்குகள் பதிவாகின. மாநிலத்தின் மக்களவை தேர்தலில் 71 சதவீதம் வரை வாக்குகள் பதிவாகின.

## வேட்பாளரின் கன்னத்தில் அறைந்த வாக்காளர்



ஆந்திராவின் குண்டூர் மாவட்டம் தெனாலியில் உள்ள ஒரு வாக்குச் சாவடிக்கு ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் வேட்பாளர் சிவக்குமாரும் அவரது ஆதரவாளர்களும் வந்தனர். அப்போது சிவக்குமார் வரிசையில் காத்திருக்காமல் நேராக வாக்குச் சாவடிக்குள் சென்றார். இதற்கு ஒரு வாக்காளர் ஆட்சேபம் தெரிவித்தார். இதனால் ஆத்திரமடைந்த சிவக்குமார், வாக்காளரின் கன்னத்தில் அறைந்தார். இதற்கு பதிலடியாக வேட்பாளர் சிவக்குமாரின் கன்னத்தில் வாக்காளர் அறைந்தார். வேட்பாளரின் ஆதரவாளர்கள், அந்த வாக்காளரை அடித்து உதைத்தனர். நீண்ட தாமதத்துக்குப் பிறகு போலீஸார் வந்து அந்த வாக்காளரை மீட்டு வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். இந்த வீடியோ அனைத்து தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பானது. இது குறித்து தெலுங்கு தேசம் கட்சியினர் தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்துள்ளனர்.

மாநில தேர்தல் ஆணையம், வேட்பாளர் சிவக்குமாரை வாக்குப் பதிவு முடியும் வரை வெளியில் எங்கும் செல்லக் கூடாது என உத்தரவிட்டது. இதன்படி சிவக்குமார் கைது செய்யப்பட்டு, வீட்டுக்காவலில் வைக்கப் பட்டார்.

63% voters turnout was recorded in the 4th phase election.

இந்து தமிழ் திசை


14 MAY 2024

# மைசூர் மகாராஜா தொடங்கிய 'அழியாத மை' நிறுவனம்

என்.மகேஷ்குமார்

தேர்தலின் போது வாக்களர்களின் கை விரலில் வைக்கப்படும் அழியாத 'மை' கர்நாடக மாநிலம் மைசூரை சேர்ந்த மைசூர் பெயிண்ட்ஸ் அண்ட் வார்னிஷ் லிமிடெட் (எம்பிவிஎல்) என்ற நிறுவனம் தயார் செய்கிறது. மத்திய அரசு கடந்த 1962-ல் இந்த நிறுவனத்துக்கு 'மை' தயாரிக்கும் பொறுப்பை வழங்கியது. நேஷனல் பிஸிக்கல் லேபரேட்டரி முறைப்படி இந்த மை தயாரிக்க வேண்டுமென உத்தரவு வழங்கப்பட்டது. அப்போது முதல் இன்று வரை நம் நாட்டில் எந்த ஒரு மாநிலத்திலோ அல்லது நாடு முழுவதிலுமோ தேர்தல் நடந்தாலும் இந்த நிறுவனத்தின் 'மை' தான் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த மையில் 7.25 சதவீதம் சில்வர் நைட்ரேட் உள்ளதால் இது விரலில் வைத்த உடனேயே காய்ந்து விடும் தன்மை கொண்டது. ஆதலால், இதனை உடனடியாக அழித்தாலும் அழியாது. 1.2.2006 முதல், வாக்காளர்களின் இடது கையில் உள்ள ஆள்காட்டி விரலில் நகம் முழுவதும் இந்த மை வைக்கப்படுகிறது. அதற்கு முன்பு வரை அதே விரலில் நகத்தின் அடி பாகத்தில் மட்டுமே மை வைக்கப்பட்டது.



வாக்காளர்களுக்கு மை வைக்கும் பழக்கம் ஆரம்பத்தில் இல்லாமல் இருந்தது. 1950-ல் இந்த மை-க்கான காப்புரிமையை நேஷனல் ரிசர்ச் அண்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் (என்ஆர்டிசி) பெற்றது. அதன் பின்னர், கவுன்சில் ஆஃப் சைன்டிபிக் அண்ட் இண்டஸ்ட்ரியல் ரிசர்ச் நிறுவனத்தார் (என்பிஎல்) இந்த மையின் தன்மையை அதிகரித்தனர். இதனை தொடர்ந்து, மைசூரில் உள்ள மைசூர் பெயிண்ட் அண்ட் வார்னிஷ் லிமிடெட் எனும் சிறிய நிறுவனம் அந்த மை-யை உற்பத்தி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியது. இந்த நிறுவனத்தை கடந்த 1937-ல் அப்போதைய மைசூர் மகாராஜாவான நான்காவது கிருஷ்ணராஜ உடையார் தொடங்கினார். இந்த நிறுவனம் தயாரித்த மை-யானது நமது நாட்டில் 1962-ல் நடந்த 3-வது மக்களவைத் தேர்தலின் போது, மைசூரில் மட்டுமே முதன்முதலில் உபயோகப்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் நாடு முழுவதும் இந்த மை அனைத்து தேர்தல்களிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

அதிக மக்கள் தொகை உள்ள நமது நாட்டில், இந்த மக்களவை தேர்தலில் 90 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களித்து வருகின்றனர். இந்த தேர்தலுக்காக 30 லட்சம் லிட்டர் அழியாத மை ஆர்டர் செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 55 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**29 நாடுகளுக்கு ஏற்றுமதி**

மைசூர் பெயிண்ட்ஸ் அண்ட் வார்னிஷ் லிமிடெட் நிறுவனம் தயாரிக்கும் இந்த மை சர்வதேச அளவிலும் புகழ்பெற்றதாக விளங்குகிறது. 1976 முதல் சர்வதேச அளவில் 29 நாடுகளுக்கு இந்த மை ஏற்றுமதி ஆகிறது.

A News Article regarding indelible Ink company Started by the Maharaja (King) of Mysore, Karnataka.

தினத்தந்தி

14 MAY 2024

நாடாளுமன்ற தேர்தலில்

# இரட்டை இலை சின்னம் எந்த அடிப்படையில் அ.தி.மு.க.வுக்கு ஒதுக்கீடு?

## தேர்தல் கமிஷன் பதில்

புதுடெல்லி, மே.14-

அ.தி.மு.க.வில் பொதுச்செயலாளர், ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு, நாடாளுமன்ற தேர்தலில் இரட்டை இலை சின்னத்தின் ஒதுக்கீடு தொடர்பான சில கேள்விகளை ஓசூரைச் சேர்ந்த பி.ஜெயசிம்மன் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் தேர்தல் கமிஷனிடம் கேட்டு இருந்தார்

அதற்கு தேர்தல் கமிஷன் அளித்த பதிலில், 'இந்த தகவல்கள் எல்லாம் தேர்தல் கமிஷனின் 20-4-2023 கடிதத்தில் கிடைக்கும்' என்று கூறப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட கோர்ட்டு உத்தரவுகளும் அளிக்கப்பட்டு உள்ளது.

தேர்தல் கமிஷனின் 20-4-2023 அன்றைய கடிதம், 'கட்சியின் திருத்தப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் அனைத்தும் கோர்ட்டு உத்தரவுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டு இருப்பதாக எடப்பாடி பழனிசாமிக்கு அனுப்பப்பட்ட கடிதம்' என்பது குறிப்பிடத்தக்கது.

ECI has response how the two leaf symbol was allocated to the ADMK party

தினத்தந்தி
14 MAY 2024

# 4–வது கட்ட தேர்தல்: மாநில வாரியாக வாக்குப்பதிவு சதவீதம்

96 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு நேற்று நடந்த 4–ம் கட்ட தேர்தலில் மாநில வாரியாக பதிவான வாக்குகள் சதவீதம் வருமாறு:–

மேற்கு வங்காளம் (8 தொகுதிகள்) : 76.56 சதவீதம்,
ஜம்மு காஷ்மீரின் ஸ்ரீநகர் தொகுதி : 37.93 சதவீதம்
ஆந்திரா (25 தொகுதிகள்) : 68.20 சதவீதம்
பீகார் (5 தொகுதிகள்) : 56.75 சதவீதம்
ஜார்கண்ட் (4 தொகுதிகள்) : 64.59 சதவீதம்
மகாராஷ்டிரா (11 தொகுதிகள்) : 57.58 சதவீதம்
ஒடிசா (4 தொகுதிகள்): 64.81 சதவீதம்
தெலுங்கானா (17 தொகுதிகள்) : 62.28 சதவீதம்
உத்தரபிரதேசம் (13 தொகுதிகள்) : 58.05 சதவிதம்
மத்தியபிரதேசம் (8 தொகுதிகள்) : 71.72 சதவீதம்

## முந்தைய தேர்தல்களில்...

முன்னதாக நடந்த 3 கட்ட தேர்தல்களில் பதிவான வாக்கு விவரம் வருமாறு:

முதல்கட்ட தேர்தல் 66.14 சதவீதம், 2–ம் கட்ட தேர்தல் 66.71 சதவீதம், 3– கட்ட தேர்தல் : 65.68 சதவீதம்.

## வாக்குசதவீதம் குறைவு:

4–வது கட்ட நாடாளுமன்ற தேர்தலில் 62.84 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்ததாக தேர்தல் கமிஷன் தெரிவித்தது.

இது கடந்த 2019–ம் ஆண்டு தேர்தலில் 4–வது கட்ட வாக்குப்பதிவில் பதிவான வாக்குகளை விட குறைவாகும். அந்த தேர்தலில் 4–வது கட்டமாக 71 தொகுதிகளுக்கு நடந்த தேர்தலில் 65.51 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தது. இதன் மூலம் இந்த தேர்தலில் 2.5 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் குறைந்திருக்கிறது.

எனினும் நேற்றைய தேர்தலில் பல வாக்குச்சாவடிகளில் 6 மணிக்கு மேலும் வாக்குப்பதிவு நடந்ததால் வாக்கு சதவீதம் அதிகரிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

62.84 % Voters turnout was recorded in the 4th phase election.

தினமணி
14 MAY 2024

# 4-ஆம் கட்ட மக்களவைத் தேர்தல்: 67% வாக்குப் பதிவு

## ஆந்திரம், மேற்கு வங்கத்தில் வன்முறை



ஜார்க்கண்ட் மாநிலம், குந்தி மாவட்டத்தில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் வாக்களிக்க காத்திருந்த வாக்காளர்கள்.

**புதுதில்லி, மே 13:** ஆந்திரம், தெலங்கானா உள்ளிட்ட 10 மாநிலங்கள்/யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 தொகுதிகளில் திங்கள்கிழமை (மே 13) நடைபெற்ற 4-ஆம் கட்ட மக்களவைத் தேர்தலில் 67 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆந்திரத்தில் பேரவைத் தேர்தலுடன் 25 மக்களவைத் தொகுதிகளுக்கும், மேற்கு வங்கத்தில் 8 மக்களவைத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற்ற நிலையில், அந்த மாநிலங்களின் சில இடங்களில் அரசியல் கட்சியினர் இடையே ஏற்பட்ட மோதல் வன்முறைச் சம்பவங்களாக மாறின.

ஒடிஸாவில் மொத்தமுள்ள 21 மக்களவைத் தொகுதிகளுடன் 147 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு 4 கட்டங்களாக தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதன்படி, 4 மக்களவைத் தொகுதிகளுடன் 28 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு முதல்கட்டமாக திங்கள்கிழமை வாக்குப் பதிவு நடைபெற்றது.

நாட்டில் மொத்தமுள்ள 543 மக்களவைத் தொகுதிகளுக்கு ஏழு கட்டங்களாக (ஏப்ரல் 19, 26, மே 7, 13, 20, 25, ஜூன் 1) தேர்தல் நடைபெற்று வருகிறது.

மூன்று கட்டத் தேர்தல்களைத் தொடர்ந்து, நான்காம் கட்டமாக ஆந்திரத்தில் 25, தெலங்கானாவில் 17, உத்தர பிரதேசத்தில் 13, மகாராஷ்டிரத்தில் 11, மேற்கு வங்கம், மத்திய பிரதேசத்தில் தலா 8, பிகாரில் 5, ஜார்க்கண்ட், ஒடிஸாவில் தலா 4 தொகுதிகளுக்கு மற்றும் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் ஸ்ரீநகர் என மொத்தம் 96 தொகுதிகளுக்கு திங்கள்கிழமை வாக்குப்பதிவு நடைபெற்றது.

**17.7 கோடி வாக்காளர்கள்:** 170 பெண்கள் உள்பட 1,717 வேட்பாளர்கள் களமிறங்கிய 4-ஆம் கட்டத் தேர்தலில் மொத்த வாக்காளர்கள் சுமார் 17.7 கோடி பேர் ஆவர். இவர்களுக்காக 1.92 லட்சம் வாக்குப் பதிவு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதில் 19 லட்சத்துக்கும் மேற்பட்ட தேர்தல் அலுவலர்கள் பணியாற்றினர்.

ஆந்திரம், ஜார்க்கண்ட், ஒடிஸா ஆகிய 3 மாநிலங்களில் கடும் நிலப்பரப்புகளில் அமைந்த 122 வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப் பதிவு இயந்திரங்களுடன் தேர்தல் அதிகாரிகள் ஹெலிகாப்டர் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

காலை 7 முதல் மாலை 6 மணி வரை வாக்குப் பதிவு நடைபெற்றது. மாலை 6 மணிக்குள் வாக்குச்சாவடிக்கு வந்து வரிசையில் நின்றவர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு, வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். அதன்படி 67 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

மக்களவைத் தேர்தலின் 4-ஆம் கட்ட வாக்குப் பதிவில் வீட்டில் இருந்தபடியே வாக்களிக்கும் வசதியை 85 வயதுக்கு மேற்பட்ட 12.49 லட்சத்துக்கும் அதிகமான மூத்த குடிமக்களும், 19.99 லட்சம் மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

**அதிகபட்ச, குறைந்தபட்ச வாக்குப் பதிவுகள்:** மேற்கு வங்கத்தில் அதிகபட்சமாக 78.44 சதவீதமும், ஆந்திரத்தில் 78.25 சதவீதமும், ஜார்க்கண்டில் 65.31 சதவீதமும், தெலங்கானாவில் 64.87 சதவீதமும் வாக்குகள் பதிவாகின.

**ஸ்ரீநகரில்:** ஜம்மு-காஷ்மீர், ஸ்ரீநகர் மக்களவைத் தொகுதியில் 38 சதவீத வாக்குகள் பதிவானது. 1996-ஆம் ஆண்டு 41 சதவீத வாக்குகள் பதிவான நிலையில், 28 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது 36.58 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

உத்தர பிரதேசத்தில் 56.35 சதவீதமும் பிகாரில் 54.14 சதவீதமும் வாக்குகள் பதிவாகின. மோசமான வானிலை நிலவிய மகாராஷ்டிரத்தில் 52.49 சதவீத வாக்குகள் பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆந்திரம், மேற்கு வங்கத்தில் வன்முறை:** ஆந்திரத்தின் பால்நாடு, கடப்பா, அன்னமயா ஆகிய மாவட்டங்களில் பல இடங்களில் ஆளும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சியான தெலுங்கு தேசம் தொண்டர்கள் இடையே மோதல்கள் நிகழ்ந்தன. வெமுரு தொகுதியில் 5 வாக்குச்சாவடிகளை தெலுங்கு தேசம் கட்சியினர் கைப்பற்றியதாக தேர்தல் ஆணையத்திடம் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் புகார் அளித்துள்ளது.

அதேபோல, மேற்கு வங்கத்தின் பிர்பூம், வர்தமான் தொகுதிகளில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ், பாஜக தொண்டர்கள் மோதிக் கொண்டனர்.

வர்தமான்-துர்காபூர் தொகுதி பாஜக வேட்பாளரின் கார் மீது கல்வீச்சு சம்பவங்களும் நடந்துள்ளன.

அரசியல் வன்முறை, வாக்காளர்களுக்கு மிரட்டல், வாக்குச்சாவடி முகவர்கள் மீதான தாக்குதல் என பல்வேறு கட்சிகள், தனி நபர்கள் சார்பில் தேர்தல் ஆணையத்தில் 1,088 புகார்கள் அளிக்கப்பட்டன.

**முக்கிய வேட்பாளர்கள்:** 4-ஆம் கட்டத் தேர்தலில், மத்திய அமைச்சர்கள் கிரிராஜ் சிங் (பெகுசராய்), அர்ஜுன் முண்டா (குந்தி), சமாஜவாதி கட்சித் தலைவரும் உத்தர பிரதேச முன்னாள் முதல்வருமான அகிலேஷ் யாதவ் (கன்னௌஜ்), முன்னாள் கிரிக்கெட் வீரர் யூசுஃப் பதான் (பஹ்ராம்பூர்), மக்களவை காங்கிரஸ் குழுத் தலைவர் அதீர் ரஞ்சன் சௌதரி (பஹ்ராம்பூர்), ஆந்திர மாநில முதல்வரின் சகோதரியும் மாநில காங்கிரஸின் தலைவருமான ஒய்.எஸ்.சர்மிளா (கடப்பா), எம்.பி. பதவி பறிக்கப்பட்ட திரிணமூல் காங்கிரஸின் மஹுவா மொய்த்ரா (கிருஷ்ணாநகர்), நடிகர் சத்ருகன் சின்ஹா (அசன்சோல்), நடிகை மாதவி லதா (ஹைதராபாத்) ஆகியோர் முக்கிய வேட்பாளர்கள் ஆவர்.

## இதுவரை 379 தொகுதிகளில்...

முன்னதாக, தமிழகம், புதுச்சேரி உள்பட 21 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 19-ஆம் தேதி முதல்கட்ட தேர்தலில் 66.14 சதவீத வாக்குகள் பதிவாகின.

கேரளம் உள்ளிட்ட 12 மாநிலங்கள் மற்றும் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள 88 தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 26-ஆம் தேதி நடந்த 2-ஆம் கட்ட தேர்தலில் 66.71 சதவீதமும் குஜராத், கர்நாடகம் உள்ளிட்ட 10 மாநிலங்கள்/யூனியன் பிரதேசத்தில் உள்ள 93 தொகுதிகளுக்கு கடந்த 7-ஆம் தேதி நடந்த 3-ஆம் கட்ட தேர்தலில் 65.68 சதவீதமும் வாக்குகள் பதிவாகின.

திங்கள்கிழமை நடைபெற்ற நான்காம் கட்டத் தேர்தலுக்கு பிறகு, நாட்டில் வாக்குப் பதிவு நிறைவடைந்த தொகுதிகளின் எண்ணிக்கை 379-ஆக உயர்ந்தது. மீதமுள்ள 164 தொகுதிகளுக்கு மே 20, 25, ஜூன் 1 ஆகிய தேதிகளில் வாக்குப் பதிவு நடைபெறும். ஜூன் 4-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

67% voters turnout was recorded in the 4th phase election.

தினமணி
14 MAY 2024

# வாக்கு ஒப்புகைச் சீட்டு தீர்ப்பு: உச்சநீதிமன்றத்தில் மறுஆய்வு மனு

புது தில்லி, மே 13: வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவாகும் அனைத்து வாக்குகளையும் வாக்கு ஒப்புகைச் சீட்டுகளுடன் முழுமையாக ஒப்பிட்டு சரிபார்க்க கோரிய வழக்கின் தீர்ப்பை மறுஆய்வு செய்யக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவாகும் அனைத்து வாக்குகளையும், வாக்கு ஒப்புகைச் சீட்டுகளுடன் 100 சதவீதம் முழுமையாக ஒப்பிட்டு சரிபார்க்கக் கோரி, உச்சநீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம், வாக்குப் பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பானவை எனவும், ஒரு நடைமுறையை கண்மூடித்தனமாக சந்தேகிப்பது அவநம்பிக்கையை அதிகரிக்கும் என்றும் கூறி, அனைத்து மனுக்களையும் கடந்த ஏப். 26-ஆம் தேதி தள்ளுபடி செய்தது.

இந்தத் தீர்ப்பை மறுஆய்வு செய்யக் கோரி, உச்சநீதிமன்றத்தில் அருண் குமார் அக்ரவால் என்பவர் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் அவர் தெரிவித்துள்ளதாவது:

வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவாகும் அனைத்து வாக்குகளையும், வாக்கு ஒப்புகைச் சீட்டுகளுடன் முழுமையாக எண்ணக் கோரிய வழக்கின் தீர்ப்பில் தவறுகளும் பிழைகளும் உள்ளன.

மேலும், இயந்திரங்களைப் பயன்படுத்தாமல் தேர்தல் பணியாளர்கள் மூலம் வாக்கு ஒப்புகைச் சீட்டுகளை 5 முதல் 8 மணி நேரத்தில் துல்லியமாக எண்ணிவிட முடியும்.

இதுமட்டுமின்றி வாக்குப் பதிவு இயந்திரங்களை வடிவமைப்போர், உற்பத்திசெய்வோர், பராமரிக்கும் தொழில்நுட்பப் பணியாளர்கள் உள்ளிட்டோர், அந்த இயந்திரங்களில் தீய நோக்கத்துடன் மாற்றங்களைச் செய்ய முடியும். எனவே, ஏப். 26-ஆம் தேதி அளித்த தீர்ப்பை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

Petition in the Supreme Court to Review the Judgment of voters acknowledgement slips.